மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தண்டிக்கப்பட்டதாக என்னிடத் தில் தகவல் இல்லை. நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டிருக் கிறார்கள் என்றுதான் இருக்கிறது.

Retrenchment of mill employees in Coimbatore.

*448 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state whether the Government are aware of the retrenchment of employees by the mill owners of Coimbatore in April 1968 ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1968-ம் ஆண்டு எப்ரல் மாதத் தில் பஞ்சாலைத் தொழிலாளர்களை பெருவாரியான வேலை நீக்கம் செய்வது பற்றி கோயமுத்தூர் ஆலை நிர்வாகிகளிடமிருந்து அறிக்கை எதும் வர வில்லை. அந்த மாதத்தில் பஞ்சாலைகளில் ஆட்குறைப்பு செய்யப்படவு மில்லை.

திரு என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாலைத் தொழிலாளர்களில் இல்லாது போனாலும் கூட வேறு எந்தெந்த ஆலை களில் ஆட்குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. எத்தனை பேர்கள் ? கொடுக் கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி பஞ்சாலையைப் பற்றியது. மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, கோவையில் ஆட் குறைப்பு சம்பந்தமாக ஒன்றும் நடவடிக்கை இல்லை. ஆனால், சிக்கனச் சேமிப்பு என்பதன் பெயரால் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலமாக தற்காலிகமாக 10 ஆண்டுகளாக இருந்தவர்களுக்கு வேலை யில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா ? அதே நேரத்தில் அந்தத் தொழிலாளர்களின் நிலைமை என்ன என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கனம் அங்கத்தினர் கூறுவது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

THIRU K. VINAYAKAM : May I know how many workers have been thrown out of employment, apart from retrenchment of employees by mill owners, and what steps this Government propose to take to reinstate them in the mills which should be opened after laborious negotiations between the Centre and the State ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி ஆட்குறைப்பு பற்றியது. அந்த மாதத்தில் ஆற்குறைப்பு எதுவும் செய்யப்படவில்லை என்று நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

மீனாட்சியம்மன் கோவில் திருப்பணி

*49 வினா—**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி அம்மன் கோவில் திருப்பணிக்கான பொது வசூல் எவ்வளவு ?

(இ) அறநிலைய இலாக்கா மூலம் கொடுக்கப்பட்ட மானியம் எவ்வ ளவு ?